# முரண்பாட்டுத் தீர்வு முயற்சிகளில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபாகம்

எஸ்.எம். ஆலிப்

**அறிமுகம்:**
மனித வரலாற்றினை நுணுக்கமாக ஆராயும்போது வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் முரண்பாடுகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். இதனால் முரண்பாடு என்பது ஒரு புதிய விடயமல்ல என்பது தெளிவாகின்றது. மனிதன் முரண்பாடுகளுக்கு முகம்கொடுத்தே வந்துள்ளான். இம்மனிதன் தனக்குள்ளும் பிறமனிதர்களுடனும் இயற்கையோடும் இனங்கள் மற்றும் அரசுகள் ஆகியவற்றோடும் முரண்பட்டுக் கொண்டுள்ளனர். இவ்விதமான முரண்பாட்டோடு பின்னிப்பிணைக்கப்பட்டுள்ள மனிதன் தாம் எதிர்கொள்கின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். அவ்விதம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மனிதன் பயன்படுத்தி வருகின்ற பயனுள்ள வழிமுறைகளுள் ஒன்றே மூன்றாம் தரப்பு மத்தியஸ்த அணுகுமுறையாகும்.

**மூன்றாம் தரப்பு:**
உள்ளக மற்றும் சர்வதேச முரண்பாடுகளில் முரண்பாட்டுத் தரப்புக்கள் தாமாகவோ முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் திணறும்போது அல்லது உள்வாரியான சமாதான முயற்சிகள் தோல்வியடையும் போது, தமது கவனத்தினை முரண்பாட்டுக்கு வெளியான / சர்வதேச சூழலில் திருப்பி தமது பிணக்கினைத் தீர்ப்பதற்கான வெளித்தரப்புக்களின் ஈடுபாட்டினை கோருகின்றனர். இவ்விதமான வேண்டுகோள்கள் ஒரு அரசினால் / அரசுகளின் குழுவால் / தனிப்பட்ட நபரினால் / தனிப்பட்டவர்களின் குழுவினால் / சர்வதேச அமைப்பினால் ஏற்கப்படலாம். இத்தகைய அரசுகள் / குழுக்கள் முரண்பாட்டுக்கு வெளிவாரியான, முரண்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புபடாதவைகளாக இருக்கும் போது மட்டுமே அவற்றின் ஈடுபாடு முரண்பாட்டுத் தரப்புக்களால் வரவேற்கப்படுகின்றது. இத்தகைய தரப்புக்களையே மூன்றாம் தரப்புக்கள் என அழைப்பர்.

பொதுவாக மூன்றாம் தரப்பு என்பது முரண்பாட்டில் சம்பந்தப்படாத, ஆனால் முரண்பாட்டுத் தரப்புக்களுக்கிடையே முரண்பாட்டைத் தீர்க்கும் அல்லது முகாமை செய்யும் முயற்சியில் ஈடுபடும் முரண்பாட்டிற்கு வெளிவாரியான தரப்பினைக் குறிப்பதாகும். வேறுவகையில் கூறினால் எதிராளிகளுக்கு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து தகராறுகளுக்கு பரஸ்பரம் திருப்திகரமான ஒப்பந்தத்திற்கு வர உதவுபவர்கள் எனக்குறிப்பிடலாம். இத்தகைய மூன்றாம் தரப்புக்கள் ஏலவே குறிப்பிட்டதற்கிணங்க பிறிதொரு அரசாக, அரசுகளின் குழுவாக, சர்வதேச அரசசார்பு அமைப்பாக, அரசசார்பற்ற ஸ்தாபனமாக, சர்வதேச நீதிமன்றமாக, மத்தியஸ்தர் குழுவாக, தனிப்பட்ட நபராக, பிரதிநிதித்துவ பணிநிலையில் செயற்படும் தனிநபர் குழுவாக இருக்கலாம். எவ்வாறாயினும் இவர்கள் முரண்பாட்டுத் தரப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இத்தகைய மூன்றாம் தரப்புக்கள் முரண்பாட்டுத் தீர்வு முயற்சியில் பல்வேறு வழிமுறைகளைக் கையாழ்கின்றன. எனினும் இவ்வழிமுறைகளை திட்டவட்டமாகத் தீர்மானிப்பது மிகவும் சிரமமானதாகும். இருந்தபோதிலும் மூன்றாம் தரப்புக்கள் பயன்படுத்தும் பின்வரும் பங்கேற்பு மாதிரிகளில் இருந்து முரண்பாட்டுத் தீர்வுச் செயன்முறையில் மூன்றாம் தரப்புக்களின் வகிபாகத்தினைப் புரிந்துகொள்ளலாம்.

1. சமரசம் செய்தல் - Conciliation
2. ஆலோசனை வழங்குதல் - Consultation
3. தூய மத்தியஸ்தம் - Pure Mediation
4. அதிகார மத்தியஸ்தம் - Power Mediation
5. நடுநிலை வகித்தல் / நடுவராகச் செயற்படுதல் - Arbitration
6. சமாதானத்தினைப் பேணுதல் - Peace Keeping (Fisher, Keashly)
7. நல்லலுவல்கள் - Good Offices (Hopmann)

மேற்கூறிய மாதிரிகள் தவிர்ந்த அனுசரணை (Facilitation) மற்றும் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் (Peace building) போன்ற பங்கேற்பு மாதிரிகளையும் மூன்றாம் தரப்புக்கள் கைக்கொள்கின்றன. இத்தகைய மாதிரிகளின் பிரயோகமானது முரண்பாட்டுத் தரப்புக்களின் விருப்புக்கள், மூன்றாம் தரப்புக்களின் ஆர்வங்கள், முரண்பாட்டின் தன்மை

போன்றவற்றிலேயே தங்கியிருக்கின்றது. இம்மூன்றாம் தரப்பு பங்கேற்பு மாதிரிகளுள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மிகப்பிரதானமானதும் பிரபல்யமானதுமான மாதிரியாகும். எனவே இம்மாதிரியின் / அணுகுமுறையின் வகிபாகம் குறித்தே இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

**வரலாற்றில் மத்தியஸ்தம்:**
முரண்பாட்டுத் தரப்புக்கள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்பின் உதவியை நாடுகின்ற போது அம்மூன்றாம் தரப்புக்கள் கையாளுகின்ற பல்வேறு முரண்பாட்டு தீர்வு அணுகுமுறைகளுள் ஒன்றே மத்தியஸ்தமாகும். இவ்விதமான மத்தியஸ்தமானது மனித ஊடாட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் சர்வதேச உறவுகளிலும் பரவியுள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச அளவில் மிகுந்த முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களாக முரண்பாட்டு ஆய்வியல் துறையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய எண்ணக்கருக்களுள் ஒன்றாகவும் மத்தியஸ்தம் பற்றிய எண்ணக்கரு விளங்குகின்றது. இதனாலேயே 1990 இல் இடம்பெற்ற முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கான சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய, முரண்பாட்டுக் கற்கைத் துறையின் ஸ்தாபர்களுள் ஒருவரான மோர்டன் டச் (Morton Deutch) கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்தும் உலகில் ஆதிக்கம் செலுத்துகின்ற முக்கிய ஐந்து எண்ணக்கருக்களுள் ஒன்றாக மத்தியஸ்தத்தைச் சுட்டிக்காட்டினார்.

மத்தியஸ்த கற்கையின் வரலாறு பல ஆண்டுகளைக் கடந்து வந்துள்ள போதிலும் அது தொடர்பிலான அம்சங்களில் கருத்தொருமைப்பாடற்ற தன்மையே அது சார்ந்த புலமையாளர்கள் மத்தியில் இன்னும் தொடர்ந்த கொண்டிருக்கின்றது. அதாவது ஒரு வெற்றிகரமான மத்தியஸ்தம் எவ்விதம் அமையப்பெற வேண்டும், அது எவ்வாறு மதிப்பிடப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் குழப்பங்கள் நிறைந்ததாகவே உள்ளன.

வரலாற்றினூடாகப் பார்க்கும் போது தனிநபர்கள், குழுக்கள், இனங்கள், சமூகங்கள், அரசுகள் என்பன தங்களுக்கிடையே சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அழிவைத் தரக்கூடிய நடத்தைப் பாங்குகளையும் வெளிப்படுத்தியுள்ளன. இதன்படி வரலாற்றில் இரு விரோத செயற்பாட்டாளர்களுக்கிடையிலான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு அல்லது முகாமைத்துவம் செய்வதற்கு அல்லது கையாழ்வதற்கு பல்வேறு பகுதியினரும், கட்டமைப்புக்களும், நிறுவனங்களும் மத்தியஸ்த வழிமுறையினைக் கடைப்பிடித்திருந்தனர். இவ்விதமான பகுதியினரும் கட்டமைப்புக்களும் போட்டியினூடாக வடிவமைக்கப்பட்ட சாதாரணமான தவிர்த்தல் முதல் வாய்மொழியிலான எதிர்ப்புக்கள், இருவருக்கிடையிலான பிணக்குகள் மற்றும் பல்வேறு விதமான நேரடி வன்முறைகள் வரை தமது செயற்பரப்பை விரிவாக்கியிருந்தனர்.

இதன்படி வரலாற்றின் ஆரம்பகாலத்திருந்து இன்று வரை மத்தியஸ்தமானது ஒரு முக்கியமான நுட்பமாக இருந்துவருகின்றது. இவ்விதமான மத்தியஸ்த செயற்பாடுகளுக்கு பல்வேறு விதமான உதாரணங்களை எடுத்தாள முடியும். இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற உலகின் பிரதான மதங்களில் புனித நூற்களிலும் இதற்கான உதாரணங்கள் காணக்கிடக்கின்றன. மேலும் பண்டைய *சீனாவில்* தனிப்பட்ட சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான பிரதானமான வழிமுறையாக மத்தியஸ்தம் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே கிரேக்க நகர அரசுகளுக்கிடையிலான பல்வேறு பிரச்சினைகளின் போதும் மத்தியஸ்தமானது தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதுடன் வளர்ந்து வருகின்ற இராஜதந்திர வழிமுறைகளிலிருந்தும் பிரித்துப் பார்க்கப்பட முடியாத ஒன்றாகவும் மத்தியஸ்தம் விளங்குகின்றது. இதற்கமைய அரச இராஜதந்திரத் தூதுவர்களின் பணிகள் பற்றி விபரிக்கும் சட்டத் தொகுப்புக்களிலும் மத்தியஸ்தமானது பிரதான இடத்தைப் பெறுகின்றது.

தற்போதய சர்வதேச சூழலில் தளர்வான கட்டமைப்பு, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள், நெறிமுறைகள் இன்மை, மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரம் இன்மை, அரசுகள் மற்றும் அரசல்லாத செயற்பாட்டாளர்களின் நிறுத்தப்படமுடியாத மத்தியஸ்த செயற்பாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, மிகையான பாதுகாப்புச் சவால்கள், அதிகரித்த இனரீதியான இணக்கமின்மை, முரண்பாடுகளுக்கான அதிகரித்த வாய்ப்புக்கள் போன்றவற்றால் அடையாளப்படுத்தப்படுகின்ற ஒரு பல்தன்மையிலான சூழல் விருத்தியடைந்துள்ளது. இதனால் செயற்றிறன் வாய்ந்த முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கான தேவை இன்று ஏற்பட்டுள்ளது எனலாம். அந்தவகையில்

மத்தியஸ்தமானது அதனளவில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு ஒரு நடைமுறைசார்ந்த வழிமுறையை வழங்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும் சர்வதேச அல்லது பிராந்திய ஒழுங்குகளை கட்டமைப்பதற்கு உதவுவதாகவும் மத்தியஸ்தம் பார்க்கப்படுகிறது. முரண்பாட்டில் தொடர்புபடுகின்ற எல்லாச் செயற்பாட்டாளர்களினதும் அக்கறையுள்ள பெறுமானங்களான சுதந்திரம், இறைமை, தெரிவுச் சுதந்திரம் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம் காரணமாகவே மத்தியஸ்தம் அவ்விதமான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வரைவிலக்கணமும் தன்மைகளும்:**
மத்தியஸ்தத்தின் வரையறைகள், அதன் தன்மைகள் குறித்து தெளிவான அல்லது கருத்தொருமைப்பாடான கருத்துக்களைப் பெறுவது என்பது மிகவும் கடினமானதாகும். இது தொடர்பான கருத்துக்களை வெளியிட்டுள்ள புலமையாளர்கள் மத்தியிலும் மத்தியஸ்தம் குறித்து ஒருமித்த செம்மையான விளக்கங்கள் காணப்படுவதில்லை.

மத்தியஸ்தம் பற்றி கார்ல் ஸ்டீவன் (Carl Stevens) குறிப்பிடும் போது "மற்றைய சமூகத் தோற்றப்பாடுகளைப் போன்று மத்தியஸ்தமும் முறையான பகுப்பாய்விற்கு இடமளிக்கும் ஒன்றாகும். இப்பகுப்பாய்விற்கான திறவுகோள் என்பது, பேரம் பேசும் செயன்முறையின் ஒரு முழுமையான பகுதியாக எங்கு மத்தியஸ்தம் பயன்படுத்தப்படுகிறது என்பதை அங்கீகரிப்பதிலேயே தங்கியிருக்கின்றது" என்று கூறுவதுடன் "பேரம் பேசும் பேச்சுக்கள் பற்றிய பொதுவான பகுப்பாய்வுச் சூழலுக்கு அப்பால் ஒரு மத்தியஸ்த பகுப்பாய்வு என்பது சாத்தியமற்றது" எனவும் குறிப்பிடுகின்றார் *(Bercovitch, 1992:3)*. இவ்விளக்கத்தினை ஒத்தவொரு விளக்கத்தினையே டொம் செல்லிங்கும் (Tom Schelling) முன்வைக்கின்றார். இவரது கருத்துப்படி அனேகமாக ஒரு மத்தியஸ்தரானவர் "தொடர்பாடல் நடவடிக்கையின் ஒரு அடிப்படையாக அல்லது தானாகவே பணம் செலுத்தும் ஒரு கட்டமைப்பினைக் கொண்ட மூன்றாம் தரப்பாகப் பார்க்கப்படுகின்றார்" *(Bercovitch, 1992:3)*. இவ்விரு விளக்கங்களும் மத்தியஸ்த பகுப்பாய்விற்கு மிக முக்கியமானதும் அழுத்தம் நிறைந்ததுமான அம்சங்களைக் கொண்டுள்ளது.

மேற்கூறிய விளக்கங்கள் ஒவ்வொன்றும் மத்தியஸ்த பகுப்பாய்விற்கு மிக முக்கியமானதும் அழுத்தம் நிறைந்ததுமான அம்சங்களைக் கொண்டுள்ளது. இதன்படி மத்தியமானது முறையாக ஆய்வு செய்யப்படக்கூடியது. ஆனால் அது ஒரு பரந்த சூழ்நிலையில் உள்ள அல்லது பேச்சுவார்த்தைக் கட்டமைப்பில் உள்ள மற்றும் முரண்பாட்டுத் தரப்புக்கள் அவர்களுடைய முரண்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கான அவர்களது சொந்த முயற்சியில் உள்ள ஒரு அம்சமாக மட்டுமே ஆய்வு செய்யப்பட முடியும். இவ்விடயத்தோடு இணைத்து மத்தியஸ்தத்தில் கவனம் செலுத்தியுள்ள ஸ்டல்பேர்க் (Stulberg) மத்தியஸ்தம் என்பது "பேச்சுவார்த்தை செயன்முறையின் மேல் கட்டமைக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக உள்ளது" *(Bercovitch, 1992:4)* எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் ஓரேன் ஜங் மத்தியஸ்தம் பற்றிக் குறிப்பிடும் போது "பிணக்கில் நேரடியாகச் சம்பந்தப்படாத ஒரு தரப்பு, பேரம் பேசும் உறவுகளில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரச்சினைகளைக் குறைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்பாட்டாளரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுமாகும்" என்கிறார். மேலும் பிணக்குட்பட்டவர்கள் அவர்களாகவே பிரச்சியினைத் தீர்ப்பதற்கு அனுசரனை வழங்குவதையும் இது குறிக்கின்றது" *(Bercovitch, 1992:5)* என ஓரேன் ஜங் கூறியுள்ளார். இவரது வரைவிலக்கணத்தினை ஒத்த வரைவிலக்கணத்தினையே கிறிஸ் மிச்சலும் முன்வைத்துள்ளார். அவரது வரைவிலக்கணப்படி "தரப்புக்களுக்கிடையிலான அபாய நிலையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு சில விட்டுக்கொடுப்பான தீர்வுகளை எடுப்பதை முதன்நிலை நோக்காகக் கொண்டு அல்லது குறைந்த பட்சம் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற முரண்பாட்டு நடத்தைகளை முடிவிற்குக் கொண்டுவருவதனை முதன்நிலை நோக்காகக் கொண்டு ஒரு மூன்றாம் தரப்பினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு இடைநிலைச் செயற்பாடுமாகும்" *(Bercovitch, 1992:5)* எனக்குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதம் பலவாறு வரைவிலக்கணம் செய்யப்படுகின்ற மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது குறிப்பிட்ட பிணக்கில் அதன் ஈடுபாட்டினை ஆரம்பிப்பதற்கான தூண்டுதல்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும் என ஜெகொப் பேர்கோவிட்ச் Jecob Bercovitch குறிப்பிடுகின்றார். அவை;

1. நீண்டகாலம் நிலைத்திருக்கும் ஒரு மோதலின் வடிவத்தை மாற்றுவதில் ஒரு கருவியாக இருப்பதற்கான விருப்பம்.
2. ஒரு உண்மையான சர்வதேச மோதலை கண்காணிப்பதற்கான, பகுப்பாய்வு செய்வதற்கான மற்றும் செல்வாக்குச் செலுத்துவதற்கான விருப்பம்.
3. அரசியல் தலைவர்கள் தாங்கள் தங்களுக்கான செயற்பாட்டு நலன்களை சம்பாதிப்பதற்கான அல்லது பெறுவதற்கான விருப்பம்.
4. மோதல் முகாமைத்துவம் பற்றிய கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவருதற்கான விருப்பம்.
5. ஒருவருடைய கருத்துக்களை பரவலாக்குவதற்கான விருப்பம், தனிப்பட்ட நிலையை உயர்த்துவதற்கான விருப்பம், தொழில்சார் அந்தஸ்தத்தினை விரிவாக்குவதற்கான விருப்பம்.

ஒரு மத்தியஸ்தர் ஒரு அரசாங்கத்தின் அல்லது ஒரு அமைப்பின் உத்தியோகபூர்வ பிரதிநிதியாக இருக்கின்ற போது, வேறு சில உந்துதல்கள் ஏற்படலாம். இதன்படி தனிப்பட்ட அரசியல் நடிகர்கள் போன்றவர்கள் பின்வரும் காரணங்களுக்காக மத்தியஸ்தத்தை தொடர விரும்பலாம்.

1. பிணக்கில் தலையிடுவதற்கான தெளிவான ஆணையைக் கொண்டிருத்தல். உதாரணமாக அரபு லீக், அமெரிக்க ஐக்கியத்திற்கான அமைப்பு, அமெரிக்க அரசுகளின் ஒழுங்கமைப்பு போன்றவற்றின் யாப்புக்கள் அனைத்தும் அதன் உறுப்பினர்கள் பிராந்திய பிணக்கில் மத்தியஸ்தம் செய்வதற்கான தெளிவான கட்டளை வாசகங்களைக் கொண்டிருக்கின்றது.
2. ஒரு பிணக்கின் தொடர்ச்சி அவர்களது சொந்த அரசியல் நலன்களுக்கு எதிரான பாதிப்புக்களை ஏற்படுத்துமாயின் அவர்கள் அப்பிணக்குத் தொடர்பில் ஏதும் செய்யவிரும்பலாம்.
3. ஒன்று அல்லது இரு தரப்புக்கள் நேரடியாக மத்தியஸ்தம் செய்ய அணுகப்பட்டிருக்கும் போதும் அல்லது கேட்கப்பட்டிருக்கும் போதும் அவர்கள் ஒரு பிணக்கில் மத்தியஸ்தம் செய்ய நகரலாம்.
4. அவர்கள் ஒரு பகுதியாக இருக்கும் கடமைப்புக் கெடாது பாதுகாக்க அவர்கள் விரும்பும் போதும் மத்தியஸ்தம் செய்ய விரும்பலாம். உதாரணமாக கிரேக்கத்திற்கும் துருக்கிக்கும் இடையிலான பிணக்கின் போது ஐக்கிய அமெரிக்காவினால் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான மத்தியஸ்த முயற்சியைக் குறிப்பிடலாம்.
5. பிணக்கில் உள்ள தரப்புக்களுக்கு இன்றியமையாததாகுவதன் மூலம் ஒரு அல்லது இரு முக்கிய தரப்புக்களினதும் நன்றியை, சம்மதத்தினைப் பெறுவதன் மூலம் அவர்களது செல்வாக்கைச் செலுத்துவதற்கான, உயர்த்துவதற்கான ஒரு வழியாகவும் மத்தியஸ்தத்தைப் பார்க்கலாம்.

**மத்தியஸ்தம் கைக்கொள்ளும் வழிமுறைகளும் உபாயங்களும்:**

மத்தியஸ்தம் கைக்கொள்ளும் வழிவகைகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகளுள் ஒரென் யங் (Oran Young) என்பவரின் ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும். இவரது ஆய்வில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்கள் பிணக்கினை முடிவிற்குக் கொண்டுவருவதில் எவ்வகையான பங்கினையும், தொழிற்பாட்டினையும் வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி

1. மத்தியஸ்தர் முரண்பட்ட பிரிவினர்கள் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு வாய்ப்புக்களை ஏற்புடுத்திக் கொடுத்தல் அல்லது அவர்களுக்கிடையே ஏற்கனவே உடன்பாடுகள் அடையப் பெற்று இருந்தால் அவற்றை அமுல்படுத்த உதவுதல். இதன்போது மூன்றாம் தரப்பினர் அடிப்படையான உடன்பாடுகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் காணப்படமாட்டாது. எனினும் இச்சந்தர்ப்பத்தில் பின்வரும் உபாயங்களைக் கைக்கொள்ள முடியும்.

i. அலுவலக நன்மதிப்பைப் பயன்படுத்துதல் (Good Office): முரண்பட்ட பகுதியினருக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக தொழிற்படுவதுடன் அவர்களுக்கிடையே தகவல்களை பரிமாற்றுபவராகவும் காணப்படலாம். மேலும் மூன்றாம் தரப்பினர் முறையான ராஜதந்திர வழிமுறைகளை அமைப்பதுடன் எதிரிகளை முறையான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் தூண்டுகின்றனர்.

ii. தகவல்களை வழங்குதல் (Data Sources): முரண்பட்ட பிரிவினர்களிடையே தொடர்புள்ள உண்மையான தகவல்களை வழங்குதல் என்பது இதன் பொருளாகும். இங்கு கட்டாயமாக முரண்பட்ட பிரிவினர்களுக்கு கிடைக்க வேண்டிய சகல தகவல்களையும் இவர் வழங்க வேண்டும் எனக்கருதப்படுகின்றது.

iii. மேற்பார்வை செய்தல் Supervising: இது முரண்பட்ட பிரிவினர்களிடையே ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது அவர்களுக்கிடையே யுத்தநிறுத்தம் இடம்பெற்றிருக்கும் போது இது நிகழவரும். மேலும் ஏற்றுக்கொண்ட வழிமுறையின்படி சண்டைகளை கட்டுப்படுத்தல், அத்துமீறல்களை கையாளுதல் என்பன இதில் அடங்கும்.

2. பேச்சுவாாத்தை காலகட்டத்தில் முரண்பட்ட பிரிவினரிடையே ஒப்பந்தங்களை ஏற்படுத்தல். இதன் மூலம் அவற்றைப் பாதுகாப்பவராகவும், அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் முக்கியமான பங்கினையும் மத்தியஸ்தம் மேற்கொள்கின்றது. இது விடயத்தில் பின்வரும் உபாயங்களை மத்தியஸ்தர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

i. தூண்டுதல் (Persuation): இதன்பொருள் முரண்பாட்டுத் தரப்புக்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதனை பேண வழியமைப்பதுடன், அவர்கள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் முன்னேறிச் செல்வதற்கும் வழிப்படுத்தல்.

ii. அதிகாரபூர்வமாக அறிவித்தல் (Enunciation): ஒரு முரண்பாட்டில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவது என்பது இதன்பொருளாகும். ஒரென் யங் Oran Young இன் கருத்துப்படி மத்தியஸ்தர் விளங்கிக் கொண்டதன்படி பிணக்குடன் சம்பந்தப்பட்டதனை தெளிவாக எடுத்துக் கூறுவதுடன் ஒழுங்குமுறையான உடன்பாட்டுக்கு வருவதற்கான அடிப்படைக் கொள்கைகளையும், போக்குகளையும், வழிமுறைகளையும் வெளிப்படுத்த வேண்டும். மேலும் பல தரப்பட்ட முக்கியமான பிணக்குகளில் முரண்பாட்டினர் பொதுவான உடன்பாட்டினை அடைந்து கொள்வதிலும் உதவுதல் வேண்டும்.

iii. விவரித்தலும், ஆரம்பித்தலும் (Elaboration and Initiation): முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவருவதற்காக பொதுவான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் திட்டத்தினை உருவாக்குதல், தனது சொந்த முயற்சியில் உறுதியான ஒப்பந்தங்களை உருவாக்குவதில் ஈடுபடல் என்பவற்றின் போது மத்தியஸ்தர்கள் இவ்வழிமுறையினைக் கையாழ்கின்றனர்.

iv. பங்குபற்றல் (Participation): ஒப்பந்தம் ஏற்பட்டதன் பிற்பாடு மத்தியஸ்தர் அதன் பிரதான பங்காளியாக மாறுகின்றனர். அதனால் உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளச் செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும் முக்கியமான கடமையாற்ற வேண்டிய பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும். இதற்கு மத்தியஸ்தரின் பங்குபற்றுதல் அவசியமாகும்.

ஆகவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது பிணக்கினை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக முரண்பட்ட இருபகுதியினரிடையேயும் தொடர்புகளை ஏற்படத்துபவராகவும் தகவல்களை வழங்குபவராகவும் தகவல்களை மொழிபெயர்ப்பவராகவும் தீர்வுகளின் உத்தரவாழியாகவும் விசேட தீர்வுகள் வெளிவருவதனை ஆதரிப்பவராகவும் தீர்வுகளினை மேற்பார்வை செய்பவராகவும் தொழிற்படுகின்றார். இவைகள் திறமையாகவும் சக்தி வாய்ந்தவையாகவும் இருக்கவேண்டுமானால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் பங்கும் பணியும் முரண்பாட்டுடன் ஒத்ததாக காணப்படல் வேண்டும்.


இதன்படி பின்வரும் சந்தர்ப்பங்களில் சர்வதேச மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் பயன்படுத்தப்படலாம்.

1. சர்ச்சைகள் நீண்டகாலம் உடையதாகவும், சிக்கலானதாகவும் இருக்கும் போது
2. சர்ச்சைக்குட்பட்டவர்களின் சொந்த முயற்சியிலான முரண்பாட்டு முகாமை தோல்வியடையும் போது அல்லது இக்கட்டான நிலையை அடையும் போது
3. சர்ச்சையில் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு தரப்பினர் பிரச்சினையை தொடர்ந்து வைத்துக் கொண்டு இருக்கும் போது
4. சர்ச்சைக்குட்பட்டவர்கள் தமது தொடர்புகளையும், தகவல் பரிமாற்றத்தையும் இடைநடுவில் நிறுத்தும் போதும்.

இந்தவகையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது முரண்பாடுகளை தீர்க்கும் நடவடிக்கையாக கருதப்படுவதனால் சர்வதேச தொடர்புகளில் முக்கியமானதும் பொருத்தப்பாடுடையதுமாக விளங்குகின்றது. இது அறிவுபூர்வமான உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதுடன் சுயாதீனமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் வாய்ப்பு வழங்குகின்றது. மேலும் முரண்பட்ட பிரிவுகளின் பரஸ்பர வெற்றிக்கும் வாய்ப்பளிப்பதுடன் முரண்பாட்டினை முடிவிற்குக் கொண்டுவருவதில் இலகுவானதும், நெகிழ்ச்சியானதுமான போக்கினை வெளிப்படுத்த வருகின்றது. திருப்திகரமான முடிவுகள் எதிர்பார்த்தபடி வழங்குவதிலும் உறுதுணையாக இருப்பதுடன் ஒரு அரசின் உரிமையைப் பலவந்தப்படுத்துவதோ, பயமுறுத்துவதோ, ஆபத்துக்குள்ளாக்குவதோ இங்கு இடம்பெறுவதில்லை.

எனினும் உள்நாட்டுப் பிணக்குகள், அல்லது சர்வதேசப் பிணக்குகள் சகிப்புத்தன்மைக்கு அப்பாற்பட்டதாகவும், ஸ்தம்பித நிலையைக் கடந்தும் காணப்பட்டால் 3ஆம் தரப்பின் தலையீடானது மிகவும் சிக்கலான நிலையை அடையலாம். அதாவது பிணக்கினைத் தீர்த்து வைப்பதில் மூன்றாம் தரப்பின் பல பிரயத்தனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என்பதாகும். இக்காலகட்டத்தில் முரண்பட்ட இரு பிரிவினையும் இராணுவத்தீர்வுக்குப் பதிலாக மாற்று நடவடிக்கையில் இணங்கச் செய்வது மிகவும் கஷ்டமான நடடிவக்கையாகக் காணப்படும். இக்காலகட்டத்தில் மூன்றாம் தரப்பினர் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுமாறு விடுக்கும் அழைப்பினை முரண்பட்ட பிரிவினர் தவறாக அர்த்தம் கொள்ளலாம். அதாவது தாம் யுத்தத்தை நிறுத்தினால் எதிர்த்தரப்பினர், தாம் பலயீனமாக இருப்பதனாலேயே தாம் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளோம் என எதிர்த் தரப்புக்கருத வாய்ப்பு உண்டு என மறுதரப்பு கருதுவதனால் அவர்கள் யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் சண்டையில் ஈடுபடலாம். இவ்வேளையில் அவர்கள் நன்மை பெற்றுக் கொள்வதற்காக எல்லா வகையான கலந்துரையாடல்களிலும் முரண்பட்ட பிரிவினரிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப மத்தியஸ்தர் முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. ஆதலால் மத்தியஸ்தம் வகிக்க வருகின்றவர்கள் வன்முறை முரண்பாட்டில் ஏற்பட்ட பல பாதகங்களை இரு தரப்பினருக்கும் வெளிப்படுத்தி அதற்குப் பதிலாக மேற்கொள்ளக் கூடியநடவடிக்கையை விபரிப்பதன் மூலமும், அதனையே சர்வதேச சமூகமும் எதிர்பார்ப்பதாகவும் எடுத்துக் கூறி அவர்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் மத்தியஸ்தர் ஈடுபட வேண்டும். இதனுடன் சமாதானத்திற்கான ஆரம்ப அத்திவாரத்தை இட்டு பின்னர் சமாதானப் பிரகடணங்களை வெளிப்படுத்தி அவற்றை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுத்தல் என்பன மூன்றாம் தரப்பின் முக்கியமான நடவடிக்கையாகும். இவ்வகையான தலையீடு தீர்க்கதரிசனமான முடிவினைத் தராவிட்டாலும் எதிர்காலத்தில் எதிர்பார்த்த பலனைப் பெறலாம். எனவேதான் சிறந்த மத்தியஸ்த செயன்முறைக்கான மாதிரியானது பின்வரும் வரைபடத்தின் ஊடாக விளக்கப்படுகின்றது.

**Fig. 1.** ஒரு சாத்தியமான மத்தியஸ்த மாதிரி **(A Contingency Model of Mediation):**




மூலம்: **Journal Peace Research, Vol. 28, No. 01, Feb – 1991, P – 11**

மேலும் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தமானது உந்து சக்தியை வழங்குவதன் மூலமோ, நிர்ப்பந்தம் மூலமோ ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் வெகுமதிகளை வழங்கியோ அல்லது பயமுறுத்தும் தண்டனைகள் மூலமோ மேற்கொள்ளப்படலாம். இதனை பிராந்திய ரீதியில் பலம் பொருந்திய அரசுகளோ அல்லது உலகளாவிய மட்டத்தில் பலம் பொருந்திய அரசுகளோ இவ்வழிமுறைகளை கையாளலாம். உதாரணமாக 1987இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் சர்ச்சைக்குட்பட்ட இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பயமுறுத்தியே மேற்கொள்ளப்பட்டது. இதேபோல 1993இல் இஸ்ரேல் – பலஸ்தீன பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அமெரிக்கா இஸ்ரேலினை பல நிபந்தனைகளுக்கு பணியவைத்ததன் மூலமே பேச்சுவார்த்தைக்கு அந்நாடு தயாரானது. இவ்விடயத்தில் பேச்சுவாாத்தையில் கலந்துகொள்ள மறுத்தால் யூதர்களை இஸ்ரேலில் குடியேற்றுவதற்கு அமெரிக்காவினால் வழங்கப்படும் பல கோடி டொலர்கள் மறுக்கப்படும் என்று இஸ்ரேலை பயமுறுத்தியே, அமெரிக்கா பலஸ்தீன பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் இஸ்ரேலைக் கலந்து கொள்ள வைத்தது எனலாம். இதேபோல பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களான பொஸ்னியர், சேர்பியர் மற்றும் குரோசியர்களை நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் பலவந்தங்களை பிரயோகித்தே டேய்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வைத்தன.

மேலும் தூண்டல் அல்லது வெகுமதிகளை வழங்கல் திட்டத்தின் கீழ் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்நாடுகளுக்கு சர்வதேச சமூகம், பொருளாதார உதவிகளை வழங்கும் என்ற உத்தரவாதத்தை வழங்கலாம். உதாரணமாக இஸ்ரேல் – பலஸ்தீன உடன்படிக்கைகள் வெற்றி பெற்றால் பலஸ்தீனத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஐரோப்பிய சமூகம் உதவி வழங்கும் என பலஸ்தீனக் குழுக்களிடம் தெரிவித்தமையை இங்கு குறிப்பிட்டுக்கொள்ளலாம். ஆகவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது சட்டரீதியாகவும், அதிகார ரீதியாகவும் பிணக்குகளில் தலையிடலாம். இதன் மூலம் பிணக்குகளுக்குட்பட்ட பகுதியினரிடையே கட்டுப்பாட்டையும், நீதியையும் கொண்டுவருவதுடன் சிலவேளைகளில் பிணக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் அபிலாசைகளுக்கு எதிரான முறையிலும் (ஆனாலும் சர்வதேச சமாதானத்தைக் கொண்டுவருவதாகவும்) மூன்றாம் தரப்பினர் பிரச்சினையைத் தீர்க்க முன்வரலாம்.

மேலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பயன்படுத்தும் உத்திகளுள் பேச்சுவார்த்தை அணுகுமுறையும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்விதமான பேச்சுவார்த்தை முறைகளை பின்வருமாறு இரண்டாகப் பிரிக்கலாம்.

1. முந்திய பேச்சுவார்த்தை (Pre – Negotion)
2. உண்மையானதும், ஒழுங்குபடுத்தப்பட்டதுமான பேச்சுவார்த்தை (Actual / Formal Negotiation)

இங்கு ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் மத்தியஸ்தம் வகிப்போர் வேறுபட்ட உபாயங்களையும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டியுள்ளது.

உண்மையான பேச்சுவார்த்தைக்கு முன்னர் நடைபெறும் பேச்சுவார்த்தையானது சம்பந்தப்பட்ட தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரும் உபாயத்தைக் கொண்டதாகும். இதில் உளவியல் ரீதியான நடவடிக்கையுடன் கால அட்டவணை தயாரித்தல், அடைய இருக்கும் எதிர்பார்க்கைகள், ஆரம்ப பேச்சுவார்த்தையின் நோக்கங்கள் என்பவை குறித்துக் கவனம் செலுத்தப்படும். இதன் மூலம் இரு பகுதிகளுக்கும் இடையில் பகைமையைக் குறைக்க முடிவதுடன் அவர்களை உண்மையான பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரவும் வழி ஏற்படும். அத்துடன் வெற்றிகரமான பேச்சுவார்த்தைக்குத் தேவையான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஆரம்பமாகவும் இது இருக்கலாம். இம்முறையில் இடம்பெற்று வெற்றி பெற்ற பேச்சுவார்த்தையாக 1993இல் இடம்பெற்ற இஸ்ரேல் – பலஸ்தினப் பேச்சினைக் குறிப்பிடலாம். அதாவது உண்மையான பேச்சுவார்த்தைகள் அமெரிக்காவில் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு இஸ்ரேலுக்கும் – பலஸ்தீன அதிகாரிகளுக்கும் இடையில் நோர்வேயில் இரகசியமான முறையில் பேச்சுக்கள் இடம்பெற்றன. இப்பேச்சு இடம் பெற்றதன் பின்னரே உண்மையான பேச்சுவார்த்தை அமெரிக்க தலைமையில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டு உத்தியோகபூர்வ ஒஸ்லோ (Oslo) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது எனலாம்.

ஆயுதமோதலை சமாதான வழியில் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காணப்பட வேண்டுமானால் மூன்றாம் தரப்பினர் சம்பந்தப்பட்ட கட்சியினரிடையே சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் எதிர்த்தரப்பினரின் மாற்றீடுகளை மீள ஒழுங்கமைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதிலும் கவனம்செலுத்த வேண்டும். அத்துடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் தனது நோக்கில் தெளிவாக இருப்பதுடன் எவற்றையும் மிகைப்படக் கூறாமல் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். ஆனால் முரண்பாட்டுத் தரப்பினர் எதிர்காலத்தில் முரண்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுமானால் அவர்கள் மீது அழுத்தத்தையும், தூண்டுதலையும் உபயோகித்து சமரசப்படுத்துவது மத்தியஸ்தரின் திறமையைப் பொறுத்து அமையும்.

தீவிரமான ஆயுதமோதலில் அல்லது இனமுரண்பாட்டில் மத்தியஸ்தர் நிர்ப்பந்தமான அல்லது நிர்ப்பந்தம் இல்லாத தலையீட்டை அல்லது இரண்டும் கலந்த முறையில் உபயோகிக்கலாம். இது அவரின் உபாய முறையில் மாற்றங்கள் தேவைப்படும் போது பயன்படுத்தப்படும். நிர்ப்பந்தம் இல்லாத தலையீடானது முரண்பட்ட பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது நலனுக்காக மேற்கொள்ளப்படலாம். மாறாக நிர்ப்பந்தமான தலையீடானது முரண்பட்ட பிரிவினரை குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் கொண்டுவருதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

சாதாரணமாக வற்புறுத்தல் இல்லாத தலையீட்டையே மூன்றாம் தரப்பினர் பெருமளவு விரும்புகின்றார்கள். ஏனெனில் இது செலவு குறைந்த நடவடிக்கையாக இருப்பதுடன் எதிர்பார்த்த விளைவினையும் ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதுமாகும். ஆனாலும் முரண்பாடுகள் தீவிரமானதாகவும், நீண்டகாலம் உடையதாகவும் காணப்படுமானால் மூன்றாம் தரப்பினர் பலவந்தமாகவும், பயமுறுத்தல் மூலமும் அவர்களுக்கு இடையில் உடன்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முனையலாம். இவ்வாறான பலவந்தப்படுத்தும் தலையீடானது பொருளதாரா தடையில் இருந்து இராணுவ தலையீடு வரை விரிந்து செல்லலாம். பொஸ்னியாவில் இன முரண்பாட்டை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக இவ்வாறான முறைகள் பல படித்தரங்களில் உபயோகிக்கப்பட்டதனை நாம் அறிந்து கொள்ள முடியும். ஆதலால் சமகாலத்தில் மூன்றாம் தரப்பினர் ஆயுத மோதலின் உக்கிரத்தைப் பொறுத்து பலவந்தம் மற்றும் பலவந்தமற்ற மத்தியஸ்த நுட்பங்களைக் கலந்து முரண்பட்ட பிரிவினரிடையே ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்துவதற்கு முனைப்புக் கொடுக்கலாம்.

மேற்குறிப்பிட்ட வகையில் இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த நடவடிக்கை பற்றி அவதானித்தால், 1989இல் Mozampik (மொசாம்பிக்கும்) Renamoக்கும் இடையே பேச்சுவார்த்தையினை இடம்பெறச் செய்வதில் கென்ய அரசாங்கம் முக்கிய பங்கை வகித்து வந்துள்ளது. இதேபோல சர்வதேச பேச்சுவார்த்தைக்கான காட்டர் நிலையம் எதியோப்பியாவினையும் EPLFயும் ஆரம்பப் பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்வதில் வெற்றி பெற்றது. இப்பேச்சுவார்த்தை இத்தாலி அரசாங்கத்தால் மத்தியஸ்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தச் செயற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபை:**
மோதல்களை முடிவிற்குக் கொண்டுவருவதிலும், யுத்தம் விரிவடையும் ஆபத்தான நிலையைத் தடைசெய்யுமாறும் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபை, பிராந்திய

அமைப்புக்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள் மோதல் நடைபெறும் பிரதேசங்களுக்கு பல முறை அழைக்கப்பட்டதனை வரலாறு பூராகவும் கண்டு கொள்ள முடியும். ஐக்கிய நாடுகள் சபையும், மோதல்கள் ஏற்படும் போது அமைதியை அடைய உதவி செய்யும் நோக்கில் மோதல்களை விடுத்து பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு எதிர் அணிகளைத் தூண்டியும் வந்துள்ளது. இவ்வாறான மோதல்களைத் தடுப்பதற்காக மேற்கொண்ட முறைகளும், சாதனங்களும் பல வகையாக அமைந்துள்ளன. அமைதிகாக்கும் படைகளை அனுப்பி வைத்தல், பார்வையாளர்களை அனுப்புதல், தகவல் சேகரிக்கும் குழுவினை அனுப்புதல், நல்லெண்ணத் தூதுக்குழுக்களை அனுப்புதல், மத்தியஸ்தத்திற்கு விசேட பிரதிநிதிகளை அனுப்புதல், வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைக்கும் விவாதத்திற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல், இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு வழிவிடுதல் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்படும் பலவகையான முறைகளாகும்.

முக்கியமாக மோதல்களை முடிவிற்குக் கொண்டுவருதில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் முக்கியமான கடமைகளை ஆற்றும்படி கேட்கப்படுகின்றார். இதனால் முரண்பட்ட பிரிவினரிடையே நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புதல், தகவல்களைக் கண்டறியும் செயற்பாடுகளுடன் அமைதிக்கு ஆபத்தான நிலைகளை மதிப்பீடு செய்து, முன்பாகவே இரு தரப்பினருக்கும் தெரியப்படுத்துவதுடன் அமைதியை ஏற்படுத்தும் செயற்பாட்டில் அதிக விருத்தியை உறுதிப்படுத்துவதற்கு அவர் பாதுகாப்புச் சபையையும் தயார்படுத்துவதுடன் மோதலுக்கு மத்தியஸ்தம் செய்து வைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபடவைப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றார்.

இந்தவகையில் சர்வதேச மட்டத்தில் பல ஆயுத மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு கண்டுள்ளதை நாம் அவதானிக்க முடியும். ஈரானுக்கும் – ஈராக்குக்கும் இடையில் நடைபெற்ற நீண்டகால யுத்தத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையும், செயலாளர் நாயகமும் மேற்கொண்ட செறிவான மத்தியஸ்தத்தின் விளைவாக அங்கு யுத்த நிறுத்தம் ஏற்பட்டதோடு மோதல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு அமைதியும் நிலைநாட்டப்பட்டது. இதேபோல ஆப்கானிஸ்தானிலும் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினாலும் அவர்களது விசேட பிரதிநிதிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆறு ஆண்டு கால பேச்சுவார்த்தையின் பயனாக 1988இல் அங்கு மோதல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. மேலும் சோமாலியா, கம்போடியா, மத்திய கிழக்கு போன்ற நாடுகளின் பிணக்குகளில் தனது கவனத்தை செலுத்தி அங்கே பேச்சுவார்த்தையின் ஊடாக அமைதியை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது.

**மத்தியஸ்த முயற்சியின் வரையறைகள்:**

ஐக்கிய நாடுகள் தாபனமும், வெளிநாட்டு அரசாங்கங்களும், ஏனைய சர்வதேச தாபனங்களும் அதிகளவில் மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதை அவதானிக்கலாம். எனினும் மூன்றாம் தரப்புக்களின் நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள் மீது பல வரையறைகள் காணப்படுகின்றன. இதன்படி உள்நாட்டு யுத்தத்தை பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண்பது மிகவும் கடினமாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதற்குக் காரணம் உள்நாட்டில் இன வேறுபாடுகள் மிக ஆழமாக வேருன்றிக் காணப்படுதலாகும். இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை சம்பந்தமான தரவுகளின்படி முரண்பாடுகள் தீர்வு காணப்பட்ட போதும் அவை கடைசி வரையும் நிலைத்து நிற்பது மிகவும் ஆபூர்வமாக உள்ளது. அதாவது தீர்வுகள் குறுங்காலத்திற்கு வெற்றி பெற்ற போதும் நீண்டகாலத்தில் தோல்வியினை ஏற்படுத்தி விடுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பார்பரா வோல்டர் (Barbara Walter) என்பவரின் கருத்துப்படி நாடுகளுக்கிடையிலான பிணக்கினை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும். ஏனெனில் இரு பகுதியினரும் எல்லைக்கு வெளியே இருப்பதனால், ஆனால் உள்நாட்டுப் பிணக்கானது இரு பகுதியினரும் ஒரு எல்லைக்குள்ளே இருப்பதனால் சர்ச்சைக்குட்பட்டவர்கள் மீள இணைய வரும்போது புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடுவதனால் பிணக்கு நீண்டு கொண்டே செல்லும் எனக் குறிப்பிடுகின்றார்.ஸ்டெபன் ஸ்டெட்மென் மற்றும் போள் பிள்ளர் (Stephen Stedman and Paul Pillar) என்பவரின் கருத்துப்படி 1945 – 1993க்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற 57 உள்நாட்டு யுத்தத்தில் 14 மட்டுமே பேச்சுவார்த்தையின் ஊடாக தீர்க்கப்பட்டன எனக் குறிப்பிடுகின்றார். எனவே இங்கு உள்நாட்டுப் பிணக்கினைத் தீர்வு காண்பதில் பாரிய நெருக்கடிகள் காணப்படுவதனை இது தெளிவாக உணர்த்துகின்றது எனலாம்.

நியுயோர்க் டைம்ஸ் (New York Times) என்ற பத்திரிகைத் தகவலின்படி 1945 தொடக்கம் 1989 வரைக்கும் இடைப்பட்ட காலத்தில் 79 சர்வதேசப் பிணக்குகள் ஏற்பட்டிருப்பதாகவும்

அவற்றுள் 44க்கு (56%) மத்தியஸ்தம் செய்யப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது பல வரையறைகளைக் கொண்டதாக இருப்பதனால் தீர்வு காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் பல தடைகளை எதிர்நோக்கிவருகின்றன. சிரமப்பட்டு உருவாக்கப்பட்ட பல பேச்சுவார்த்தை உடன்படிக்கைகள் இன்றும் கூட அமுல்படுத்தப்படாமலே உள்ளன. உதாரணமாக பின்வரும் பிணக்குகளுக்கான தீர்வு உடன்படிக்கைகள் இன்னும் அமுலப்படுத்தப்படாமலேயே உள்ளன. அவை; எதியோப்பிய – எரிட்ரியாப் பிரச்சினை (1962), சூடான் பிரச்சினை (1982), உகண்டா நெருக்கடி (1985), அங்கோலா பிரச்சினை (1975, 1992), ருவாண்டா பிரச்சினை (1994). இம்முரண்பாடுகளுக்கான தீர்வுகள் அமுல்படுத்தப்படாமைக்கு காணப்படும் காரணங்களுள் ஒன்று முரண்பட்ட பிரிவினரில் ஒரு பகுதியினர் நம்பகமான முறையில் செயல்படாததுடன் மற்றொரு காரணியாக சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தம் வெற்றியளிப்பதற்கு தேவையான பொருளாதார, உளவியல் மற்றும் இராணுவ ஆதரவு இல்லாதிருந்தமையேயாகும்.

காஸ்(Hass) என்பவர் சர்வதேச மத்தியஸ்தத்தில் நடத்தைவாதப் பாதிப்புக்களின் அடிப்படையில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க வருகின்றார். அந்தவகையில் முரண்பாடுகள் தீர்வு காணப்பட்டால் அல்லது அவர்களுக்கிடையே பாரிய வேறுபாடுகள் குறைக்கப்பட்டால் அது முழு அளவில் வெற்றி என்றும், இரு பகுதியினருக்குமிடையே ஆரம்பப் பேச்சுவார்த்தைகளும், உரையாடல்களும் இடம்பெற்றிருந்தால் பகுதியளவில் வெற்றி என்றும் அவர்களுக்கிடையே சண்டை நிறுத்தம் மட்டும் ஏற்பட்டிருந்தால் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றி என்றும் மத்தியஸ்தம அவர்களிடையே எது விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாவிட்டால் அது தோல்வி என்றும் வகைப்படுத்திக் கூறுகின்றார். இதுதொடர்பான விளக்கத்தினை பின்வரும் அட்டவணையில் கண்டுகொள்ளலாம்.

**Table 1.** **மத்தியஸ்த பெறுபேறுகள் 1945 – 1989 (Mediation Outcomes 1945 – 1989)**

| பெறுபேறு **Outcome** | நிகழ்ந்தவை **Frequency** | **%** | திரட்சி **Cumulative %** |
|---|---|---|---|
| முழு தீர்வு **Full Settlement** | **13** | **05** | **05** |
| பகுதி தீர்வு **Partial Settlement** | **27** | **09** | **14** |
| யுத்த நிறுத்தம் **Cease fire** | **22** | **08** | **22** |
| வெற்றிபெறாத மத்தியஸ்தம் **Mediation Unsuccessful** | **134** | **47** | **69** |
| மத்தியஸ்தம் மட்டும் வழங்கப்பட்டவை **Mediation Only Offered** | **61** | **22** | **91** |
| மத்தியஸ்தம் இல்லாதவை **No Mediation** | **27** | **09** | **100** |
| மொத்தம் **Total** | **284** | **100** | **100** |

**Source: Journal Peace Research, Vol. 28, No. 01, Feb – 1991, P – 10**

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி 1945 – 1989க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 284 முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள என்பதுடன் அவற்றுள் முழு தீர்வு காணப்பட்ட பிணக்குகள் 13 ஆக இருப்பதனை அவதானிக்கலாம். மத்தியஸ்தம் செய்தும் வெற்றிபெறாமல் தோல்வியில் முடிவடைந்த பிணக்குகளாக 134 காணப்படுகின்றன. மத்தியஸ்தம் மூலமாக யுத்த நிறுத்தத்தினை மட்டும் ஏற்படுத்திக் கொண்ட பிணக்குகளாக 22 பிணக்குகள் காணப்படுகின்றன.மேலும் 27 முரண்பாடுகளுக்கு எந்தவிதமான மத்தியஸ்தமும் மேற்கொள்ளப் படவில்லை என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கதாகும்.

பொதுவாக நாடுகளுக்கிடையேயான பிணக்கின் வெற்றி தோல்வியினை பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. இந்த வகையில் நாடுகளுடைய பொருளாதார மற்றும் இராணுவ பலத்தினை அடிப்படையாகக் கொண்டும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தரின் வெற்றி தோல்வியினைக் கணிப்பிட்டுக் கொள்ள முடியும். இந்தவகையில் முரண்பட்ட

நாடுகளுக்கிடையே பலத்தின் அடிப்படையில் பாரிய வேறுபாடு காணப்படாவிட்டால் சர்வதேச மத்தியஸ்தம் ஊடாக இலகுவில் முரண்பாட்டினை தீர்த்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மறுதலையாக அவர்களுக்கிடையே அது பாரிய வேறுபாட்டினை கொண்டிருக்குமானால் மத்தியஸ்தம் மூலம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது என ஒட் Ott மற்றும் யங் Young என்பவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் முரண்பட்ட நாடுகள் சமமான பலகீனமான நாடுகளாகக் காணப்பட்டாலும் மத்தியஸ்த முயற்சி வெற்றி பெறும் என்றும் குறிப்பிடுகின்றார்.

நாடுகளுக்கிடையே ஏற்கனவே இருந்த தொடர்புகளையும் அடிப்படையாகக் கொண்டு மத்தியஸ்தத்தின் வெற்றி தோல்வியினை நிர்ணயிக்க முடியும் என டியூட்ஸ்ச் Deutsch என்பவர் குறிப்பிடுகின்றார். இவரின் கருத்துப்படி முரண்பட்ட பிரிவினர் வரலாற்று ரீதியாக நட்பு நாடுகளாகவும், கூட்டுறவு அடிப்படையிலும் தொழிற்பட்டு வந்திருந்தால் அவர்களுக்கிடையே பிணக்கு ஏற்பட்டால் அவற்றை இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிடுவதுடன் மாறாக முரண்பட்ட நாடுகளுக்கிடையே ஆரம்பகாலத்தில் இருந்தே முரண்பாடு காணப்படுமானால் முரண்பாடுகள் ஏற்படும் போது அது மேலும் தீவிரமாகுவதனால் அப்பிணக்கினை மத்தியஸ்தம் மூலம் தீர்வு காண்பது மிகவும் கடினம் எனக் குறிப்பிடுகின்றார். இது பற்றிய விபரங்களை பின்வரும் அட்டவணை (அட்டவணை – 02) விளக்குகின்றது.

**Table 2.** **இருதரப்பினரிடையே முன்பிருந்த உறவு நிலை (Previous Relationship of the Parties)**

| | நண்பர்கள் Friends (N=15) | எதிரிகள் Antagonists (N=73) | முரண்பாடுடைய Conflictual (N=71) | ஒரு பிணக்கு 1 Dispute (N=34) | ஒன்றுக்கு மேற்பட்ட பிணக்கு +1 Dispute (N=91) |
|---|---|---|---|---|---|
| வெற்றிகள் Success (%) | 46 | 25 | 20 | 26 | 16 |
| தோல்வி Failure (%) | 54 | 75 | 80 | 74 | 84 |
| மொத்தம் Total (%) | 100 | 100 | 100 | 100 | 100 |

**Source: Journal Peace Research, Vol. 28, No. 01, Feb – 1991, P – 12**

பிணக்கு நீடிக்கும் காலத்தை அடிப்படையாகக் கொண்டும் மத்தியஸ்தம் வெற்றி பெறுமா? அல்லது இல்லையா? என்ற விடயத்திலும் சில ஆய்வாளர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதன்படி மத்தியஸ்தம் வெற்றிபெற வேண்டுமானால் சரியான நேரத்தில் அது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். மற்றொரு அறிஞரின் கருத்துப்படி நேரகாலத்துடன் மத்தியஸ்த முயற்சி மேற்கொள்ளப்படுமானால் அது வெற்றிபெறக் கூடியதாகும். பொதுவாக நீண்டகாலமாக நீடித்திருக்கும் பிணக்கினை மத்தியஸ்தம் மூலம் தீர்வுகாண்பது சற்றுக் கடினம் என்பது இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது இதற்கு சிறந்த உதாரணமாக பாலஸ்தீன – இஸ்ரேல் முரண்பாட்டை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

பிணக்கின் தன்மையைப் பொறுத்தும் மத்தியஸ்தம் ஊடாக அதனைத் தீர்த்து வைக்க முடியுமா அல்லது இல்லையா என்பதை அறிந்து கொள்ளலாம் என ஒட் (Ott) குறிப்பிடுகின்றார். தேசியப் பாதுகாப்புடன் சம்பந்தப்படாத பிணக்காக அது காணப்பட்டால் அவற்றை வெற்றிகரமான முறையில் மத்தியஸ்தம் செய்ய முடியும் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார். ரவ்டில் (Raudle) என்பவரின் கருத்துப்படி முக்கியமான பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட பிணக்குக் காணப்படுமானால் மூன்றாம் தரப்பின் மூலம் அவர்களுக்கிடையே முரண்பாட்டை முடிவிற்குக் கொண்டுவருவது மிகவும் கடினம் என்கிறார். லால் (Lall) என்பவரின் கருத்துப்படி ஒரு பிரதேசத்தின் கட்டுப்பாடு சம்பந்தமான பிணக்காக அது காணப்பட்டால் அதில் சம்பந்தப்பட்ட நாடுகள் மூன்றாம் தரப்பின் தலையீட்டை மிகக் கடுமையாக எதிர்ப்பவர்களாக காணப்படுவர் எனக் குறிப்பிடுகின்றார். பின்வரும் அட்டவணை இதுபற்றிய விளக்கங்களை புரிந்துகொள்ள போதுமானதாகும்.

**Table 3.** பிணக்கின் தன்மையடிப்படையில் மத்தியஸ்த பெறுபேறுகள்
**(Mediation Outcomes by Issues in Dispute)**

| | பிரதேசம் Territory (N=170) | கோட்பாடு Ideology (N=10) | பாதுகாப்பு Security (N=33) | சுதந்திரம் Independence (N=57) | வேறு Other (N=14) |
|---|---|---|---|---|---|
| வெற்றிகள் Success (%) | 23 | 10 | 27 | 11 | 50 |
| தோல்வி Failure (%) | 77 | 90 | 73 | 89 | 50 |
| மொத்தம் Total (%) | 100 | 100 | 100 | 100 | 100 |

**Source: Journal Peace Research, Vol. 28, No. 01, Feb – 1991, P – 10**

மத்தியஸ்தம் வெற்றி பெறுதல் ஆளுமை, திறமை, ஆற்றல், நுட்பம் என்பனவும் முக்கியமாக கருதப்படுகின்றது என யங் வெர் (Young Wehr) என்பவர் குறிப்பிடுகின்றார். அத்துடன் முரண்பட்ட பகுதியினர் அவரின் நடுநிலமையில் அசைக்க முடியாத நம்பிக்கையையும் வைத்திருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பாரபட்சமற்ற முறையில் பிணக்கினை கையாள வரும்போது நடுநிலமை முக்கியமானதாக கருதப்படுகின்றது. ஆதலால் நடுநிலமையுடன் மத்தியஸ்தம் செய்ய வரும் போது பிணக்கினை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தவகையில் மத்தியஸ்தரின் நடத்தை, மத்தியஸ்த உபாயமும், நுட்பமும் ஒரு பிணக்கினை முடிவிற்குக் கொண்டுவருதில் செல்வாக்கு செலுத்துகின்றது. பிணக்கினை கையமும் வழிமுறை, அவர் அதில் கொண்டுள்ள செல்வாக்கு, முரண்பட்ட பிரிவினரிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதில் கைக்கொள்ளும் பல தரப்பட்ட வழிமுறைகள் என்பன சர்வதேச மோதல்களை முடிவிற்குக் கொண்டுவருவதில் கூடியளவிற்கு செல்வாக்குச் செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அட்டவணை 4 இல் அறிந்து கொள்ள முடியும்.

**Table 4.** மத்தியஸ்தரின் தந்திர உபாயங்களின் மூலம் மத்தியஸ்த பெறுபேறுகள்
**(Mediation Outcomes by Mediator Strategies)**

| தந்திரோபாயம் Strategy (N) | வெற்றி Success (%) | தோல்வி Failure (%) | மொத்தம் Total (%) |
|---|---|---|---|
| மத்தியஸ்தம் இல்லாதவை No mediation (30) | 00 | 100 | 100 |
| சமரசமும் அனுசரனையும் Conciliation & Facilitation (78) | 19 | 81 | 100 |
| தொழில் நுட்பம் Procedural (45) | 20 | 80 | 100 |
| அதிகாரபூர்வ ஆணை Directive (81) | 39 | 61 | 100 |
| சார்ந்திராத Substantive (9) | 44 | 66 | 100 |
| மேற்பார்வை Supervisory (1) | 00 | 100 | 100 |
| அடையாளப் படுத்தப்படாத Unspecified (40) | 08 | 92 | 100 |
| மொத்தம் Total (284) | 22 | 78 | 100 |

**Source: Journal Peace Research, Vol. 28, No. 01, Feb – 1991, P – 10**

சர்வதேச சச்சரவுகளில் சக்திவாய்ந்த உபாயமுறைகள் வேகமான உபாயமாக கருதப்படுகின்றது. மத்தியஸ்தர் தனது உபாயீதியான தந்திரத்தின் மூலம் எதிரிகளை வியக்கச் செய்வதுடன் உபாய வழிமுறையில் புதிய பிரச்சினைகள் எழாமல் இருக்கச் செய்வதன் மூலமும் பிணக்கினை புதிய கண்ணோட்டத்தில் அணுகுவதன் மூலமும் அதனை இலகுவான முறையில் வெற்றிபெறச் செய்யமுடியும்.

முடிவுரை:

இந்தவகையில் முரண்பாடுகளை முடிவிற்குக் கொண்டுவருவதில் ஒரு சக்திவாய்ந்த வழிமுறையாக மத்தியஸ்தம் இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மத்தியஸ்தம் செய்ய வரும் ஒரு பிணக்கு வெற்றி பெறுமா அல்லது இல்லையா என்பதை பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. இங்கு அதன் வெற்றிக்கு அல்லது அதன் தோல்விக்கு முழுவதும் மத்தியஸ்தரிலேயே அல்லது அங்கு உபயோகிக்கப்படும் உபாயங்களிலேயே தங்கியிருப்பதில்லை என்பதை நாம் கண்டுகொண்டோம். மாறாக முரண்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்களுடைய தொடர்புகளில் பல காரணிகள் செல்வாக்கு செலுத்தலாம். பிணக்கின் தீவிரத் தன்மையையும், மத்தியஸ்தம் செய்வதில் மூன்றாம் தரப்பினரின் உபாயமும் அதன் வெளியீட்டை நிர்ணயிக்கும் எனலாம். இந்தவகையில் அவதானிக்கும் போது தீவிரமான முரண்பாடுகளைக் கொண்ட பிணக்குகளை விட தீவிரம் குறைந்த பிணக்குகள் மிக இலகுவான முறையில் மூன்றாம் தரப்பினர் மூலம் மத்தியஸ்தம் செய்யக் கூடியதாக உள்ளது. மேலும் மத்தியஸ்தரின் தீவிர உபாய ரீதியான ஈடுபாடு முரண்பட்ட பிரிவினரை ஒரு இணக்கத்திற்குக் கொண்டுவருவதில் மிகப் பாரிய பங்களிப்பினை வழங்க முடியும். இங்கு மத்தியஸ்தம் மூலம் எல்லாவகையான பிணக்குகளும் தீர்வு காணமுடியாது என்பதை அறிந்து கொண்டபோதிலும் பெரும்பாலான முரண்பாடுகளில் மத்தியஸ்தம் செய்ய வந்தபோது, அது பிணக்கில் பாரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை எம்மால் மறுக்கமுடியாது.

**References:**


01. David A. Lake and Donald Rothchild, (1996), Containing far the Origins and Management of Ethnic Conflict in *International Security*, Vol. 21, No. 02, pp. 41 – 75

02. Deutsch, Morton. (1973), *Introduction to the Resolution of Conflict*, New Haven, CY: Yale University.

03. Fisher, R., Ury, W. and Patton, B., (1991), *Getting to Yes*, 2nd ed. NY. Penguin.

04. Fisher, S., (2000), *Working with Conflict: Skills and Strategies for Action*, London, Zed Book publications.

05. Gaya Best, Shedrack, (2006), *Introduction to Peace and Conflict Studies*, Ibadan, Nigeria.

06. Ian Doucet, (1997), Foreign Mediation in Conflict Resolution, in *Sunday Times*, 12.04., p. 14.

07. Jayadeve Uyangoda, (ed), (2005), *Conflict, Conflict Resolution & Peace Building: An Introduction to Theories and Practice,* Colombo: Department of Political Science, University of Colombo.

08. Jecob Bercovitch, (1991), International Mediation in *Journal of Peace Research*, Vol. 28, No: 01, Feb., pp. 3 – 6

09. Jecob Bercovitch, J. Theodre Anagnosan, Donhette L. Wille, *(1991)*, Some Conceptual Issues and Empirical Trend in the Study of Successful Mediation in International Relations, in *Journal Peace Research*, *Vol. 28, No: 01, Feb.*, pp. 07 – 17